இதற்கிடையில் உமாயூனுக்கு வெகு தொந்தர நேரிட்டது. ஷேர்ஷாவினால் தோற்கடிக்கப்பட் பின்பு பார்சுதேசத்துக்கு ஓடிப்போனான். அவனு அவனுடைய பரிஜனங்களும் பாதையில் அலைச்ச லும் இளைப்பினாலும் மிகவும் தொய்ந்துபோன கள். இப்படி உமாயூன் நிலையில்லாமல் அலைந் திரிகிறகாலத்தில், அவனுக்குப் பிற்காலத்தில் இ தியாவை ஆளப்போகிற அக்பர் என்னும் குமா பிறந்தார்.

இவ்விதமாகத் தேசத்தைவிட்டுத் துரத்தப்பட் சக்கரவர்த்தி பார்சுதேசத்து அரசனிடத்தில் சே ந்து, அவ்வரசனது இஷ்டப்படி மதசம்பந்தமா அபிப்பிராயங்களை அநுசரித்தமையால், அவன்

பார்சுதேசத்தரசன் இந்துதேசத்தை மீட்பதற்காக அவனுக்கு உதவிசெய்தது.

தோஷப்பட்டு இவனுக்குத் திரண்டசேனையை கொடுத்தான். அந்த உதவியால் உமாயூன் தன் டைய சகோதரனை காமிரானைக் காபூல், காந்த நாடுகளிலிருந்து துரத்திக் கடைசியில் ஷேர்ஷ வின் சந்ததியாரிடத்திலிருந்து தன் முந்தின ரா யத்தை மீட்டுக்கொண்டான்; ஆகிலும் ஒரு வருவ துக்குப்பின் தற்செயலாய் விழுந்து அடிபட் அதனாலுண்டாகிய நோவினால் மரணமடைந்தா

1556-ஆ ஜனவரிமீ.

அவனுடைய கீர்த்திப்பிரதாபமுற்ற புத்திரர் அ னுக்குப்பின் அரசடைந்தார்.

3—ம் அதிகாரம்.

மகா முகலாயர்.

கி. பி. 1556–ஞு முதல், 1744–ஞு வரைக்கும்.

அக்பர் சிங்காதனம் ஏறினபொழுது, மிகுந்த ...ரமையுண்டாகுமென்று தோன்றியது. தகப்பன் ...ந்தபோது அவர் சிறுவயதாயிருந்ததினால், ராஜ் ... பேஹிராம் என்னும் பிரதான மந்திரியின் ...ாரணைக்கு உள்ளாக்கப்பட்டது. அந்த மந்திரி ...ணவன் ராஜ்யத்தை மிகுந்த ஜாக்கிரதையோ ... சாமர்த்தியத்தோடும் ஆண்டான். இவன் தன் ...ஷ்டப்பிரகாரம் அரசாண்டும் நல்லறிவுள்ளவனு ... கொஞ்சங்குறைய எல்லாத்தேசத்தையும் தன்னர ...ட்சிக்கு உட்படுத்தினன். அக்பருக்குத் தகுந்த ...துவந்து ராஜ்யத்தை ஒப்புக்கொண்டபோது ...ில் கலகம் இல்லாமல் சற்றேறக்குறைய அமைதி ...ண்டாயிருந்தது. அவர் வெகுகாலம் அரசாண்டது ...றி அவருடைய அரசாட்சி மிகவும் உபயோக ...ள்ளதாயிருந்தது. அவர் தமது ஆளுகைக்குட் ...ட ஜனங்களின் நன்மையையும் க்ஷேமத்தையும் ...வும் நாடியிருந்தமையால், அவர் இந்தியாவில் ...சாண்ட மகம்மதிய அரசர்களெல்லோரிலுஞ் சிற ...வரானர். மகம்மதியர் இத்தேசத்தில் அதிகாரஞ் ...லுத்திய காலமுழுவதிலும் இவர்நாளில் தேசத் ...து உண்டான சமாதான நிலையும், நீதியான ஆளு ...யும், சுகவாழ்வும் ஒருபொழுதும் உண்டாக ...லையென்னும் புகழ்ச்சி அவருக்குத் தகும். தமது

கி. பி. 1556. அக்பரின் நீடித்ததும் சிறந்ததுமான அரசாட்சி.

3. அதி. ஆளுகைக்கு உட்பட்ட பல ஜாதிகளும் ஒருமித்
வாழவும், ஒவ்வொருவனும் மற்றவர்க்கு உதவியாய்
தன்தன் வேலைகளை நடப்பிக்கவும் செய்வது அவ
மனதில் முக்கியமாய்க் கொண்ட கருத்து. இந்
உபாயத்தால் தமக்கு முன்னிருந்தவர்கள் வெளி
தேசங்களிலிருந்து ஜனங்களைத் தங்கள் தண்டுகளி
சேர்த்துக்கொண்டதுபோல்ச் செய்யாமல், சுதே
ளடங்கிய ராணுவத்தைக்கொண்டு ராஜ்யத்தி
பலத்தை விருத்திசெய்தார். ராஜாங்கத்தில் உயர்
உத்தியோகங்களை இந்துக்களுக்குக் கொடுத்தா
அவர்களுக்கு இதுவரையிலும் போடப்பட்டிரு
அநேகம் அநியாயமான வரிகளை நீக்கினர். ஷே
ஷா உண்டாக்கியிருந்த தீர்வைக்குரிய நிபந்தனை
ளைச் சீர்திருத்தினர். நியாயவிசாரணையைப்பற்றி
சட்டங்களை உறுதிப்படுத்தினர். கொரமான த
டனைகளையெல்லாம் கூடாதென்று நீக்கினர். இந்
விதவைகளைத் தங்கள் புருஷர்களோடு உடன்க
டையேறவொட்டாமல் தடுக்க மிகவும் முயன்ற
சகலவிதத்திலும் ஜனங்கள் அபிவிருத்தியடைந்
சுகமாய் வாழத் தேவையான ஸாதனங்களையெல்ல
தம்மால் இயன்றமட்டும் தேடினர். நீடிய மகம்
திய அரசர்வரிசையில் நமது கண்குளிரத்தக்கதா
விசேஷமொன்று இருக்கும்பக்ஷத்தில் அது அக்
அரசாக்ஷிதான்.

ஜிஹாங்கிர் பட்டமடைந்தது. 1605-ஞு அக்டோபர் மீ 13உ. இவருக்குப்பின் பட்டத்துக்கு வந்த இவர் கு
ரனை செலீம் என்பவன் "உலகஞ் ஜயித்தோன்
என்று அர்த்தங்கொள்ளும் ஜிஹாங்கிர் என்னு
பெயரைப் பெற்றவன். இவன் சோம்பலும் அஜ
கிரதையுமுள்ள அரசன். ஆனாலும் ராஜ்யத்
இவனுடைய தந்தை நல்ல சீரில் வைத்திருந்த
யால், இவன் அரசாட்சியில் பெரும்பாலும் சமா
னமே மேலிட்டிருந்தது.

3. அதி.

நூர்ஜிஹான் என்பவளைச் சக்கரவர்த்தி மணஞ்செய்தது. இ. பி. 1611.

ஜகஜ்ஜோதி" என்று அர்த்தங்கொள்ளும் நூர்ஜி ன் என்னும் பெயர்கொண்ட நல்ல அழகும் வியும் உள்ள பெண்ணை இந்தச் சக்கரவர்த்தி வும் நேசித்த சரித்திரம் அவனுடைய ஆளுகை வெகு முக்கியமானது. அவன் தகப்பனுடைய காலத்திலேயே அவளிடத்தில் அன்புவைத்தி நான். ஆனாலும், அவளை அவன் விவாகஞ் செய்து ள்வதற்கு அக்பர் சம்மதிக்கவில்லை. ஆகை ் அவளை உயர்ந்த அந்தஸ்துள்ள பிரபுவாகிய வர் விவாகஞ் செய்துகொண்டார். ஆகிலும், லீம் சக்கரவர்த்தியானபிறகு தனது எண்ணத் எவ்விதத்திலாகிலும் முடிக்கத் தீர்மானித்துக் ாண்டு, அவளுடைய புருஷனைக் கொன்றுபோ படி செய்து, அவளைத் தனது அந்தப்புரத்துக்கு ழைப்பித்துக்கொண்டான். ஆனாலும் அவனு -ய ஆசை தணிந்ததினால் அவளைப் பின்பு அதிக ன்போடே ஆதரிக்காமல் அங்கேயே அவளை வத்துவிட்டான். ஆகிலும், அவள் அவனை மறுபடி தன்பேரில் இஷ்டப்படும்படி உபாயஞ்செய்து ாண்டாள். ஆகையால் அவளை அவன் பின்பு ணஞ்செய்துகொண்டு அரசி என்னும் பட்டப் யர் தரிப்பித்து மரணம்வரைக்கும் அவள் சொன் படி ஆடினான்.

அவன் ராஜ்யபாரத்தின் முடிவில் உண்டான கலகம்.

ஜிஹாங்கிர் விருத்தாப்பியமானபொழுது அவன் மாரரில் ஒருவனுடைய துஷ்டத்தனத்தாலும், அதி ரம் செலுத்தவேண்டுமென்று நூர்ஜிஹானுக்கி ந்த ஆசையாலும் உண்டான கலகங்களால் அவன் ஞ்சலமடைந்தான். அரசியானவள், முகாபத்கான் ன்னும் ஒரு பிரபுவை அவமானஞ்செய்ததினால், வன் கலகஞ்செய்தெழும்பி, ஜிஹாங்கீரைச் சிறை ாகப் பிடித்தான். விடுதலையான சில நாளைக்குப்

3. அதி.

ஷாஜிஹான் பட்டமடைந்தது. கி. பி. 1627-ஹு அக்டோபர்மீ 28உ.

பின்பு ஜிஹாங்கிர் இறந்தான். அவனுக்கு வி
மாய்க் கலகஞ்செய்ததினால் அவனைப் பட்டத்தி
ந்து நீக்கவேண்டுமென்றிருந்த குமாரனான ஷ
ஹான் அவனுக்குப்பின் பட்டத்துக்கு வந்தான்

இந்த அரசன் அரசாண்டகாலத்தில் காபூலி
தக்ஷிணத்திலும் சண்டைகள் நடந்தன; ஆகிலு
இவ்விதமான சங்கதிகளைப்பார்க்கிலும் இ

தன் பிள்ளைகளை நடப்பித்த வகை.

தனது குமாரர்களை நடத்திய வகை விசேஷமான
டில்லிச் சக்கரவர்த்திகள் தங்கள் குடும்பத்தில் ஒ
ருக்கும் சமஸ்தானத்தில் உயர்ந்த அதிகாரம் கொ
மலிருப்பதே வழக்கம். என்றாலும் ஷாஜிஹான்
வில் இந்த வழக்கத்தை மாற்றினான். அவன் இப்ப
மாற்றினது அவனுக்கே கெடுதியாய்முடிந்த
அவன் தனது பிள்ளைகளை மிகவும் நம்பி, அ
களுக்குப் பொறுப்பான உத்தியோகங்களைக் கொ
டுத்து, தனது சேனைகளுக்கு அவர்களை அதிப
ளாக்கினான். இந்தப் பிள்ளைகள் தாரா, ஷுஜ

அவர்கள் குணங்கள்.

ஔரங்கஜீப், மோராத் என்பவர்களாம். அவர்க
எல்லாரும் வெவ்வேறான குணம் உடையவர்க
எப்படியெனில், தாரா கருவம் கொண்டவனு
முன்கோபியுமாம். ஷுஜா சிற்றின்பப்பிரிய
கடைசியவனான மோராத் ஒருவருக்கும் அடங்கா
மூடன்; ஔரங்கஜீப் கவடும், எச்சரிக்கையும்,
திரமுமுள்ளவனாகி, எப்போதும் மேன்மை
நாடுகிறவனாயிருந்தான்.

ஷாஜிஹான் வியாதிப்பட்டது. அதிகாரத்துக்காக அவனுடைய பிள்ளைகள் சண்டைசெய்தது.

1657-ஹுத்தில் ஷாஜிஹான் வியாதிப்பட்
வெகு அபாயமான ஸ்திதியிலிருந்தமையால் தா
துரைத்தனகாரியங்களை நடத்தச் சக்தியில்லாம
தன்னுடைய மூத்தகுமாரனான தாராவுக்கு அ
அதிகாரத்தைக் கொடுத்தான். அவனுடைய மற்ற
குமாரர் உடனே அரசாட்சி தங்களுக்கும் வே

ன்று போராடித் தங்கள் மூத்தசகோதரனுக்கு ராதமாய் யுத்தம்பண்ண ஆரம்பித்தார்கள். வங் த்திலிருந்த ஷுஜா முதலில் சண்டைக்குப் பட்டுவந்தான்; ஆனாலும் யுத்தத்துக்கு எத்தனம் ணுகையில் ஷாஜிஹானுக்கு உடம்பு சொஸ்த , தாராவும் அதிகாரத்தை அவனிடத்தில் திரும்ப புவித்துப்போட்டான்; ஷுஜா இதைக் கேள்வி ட்டும் நம்பாதவன்போல, டில்லிக்கு அருகே னையைக் கூட்டிக்கொண்டு வந்தபொழுது, அவ ந் தாராவின் குமாரனான ஸாலிமான் முறிய துத் துரத்திவிட்டான். 3. அதி. இ. பி. 1657.

)ப்படியிருக்கையில், தக்ஷிணத்திலிருந்த ஔரங் பும், கூர்ஜரத்திலிருந்த மோராத்தும், சும்மா நக்கவில்லை. ஔரங்கஜீப் தனக்கு சிங்காதனம் வையில்லையென்றும், இனி பக்திமார்க்கத்தில் ஜீவகாலத்தைக்கழிக்கவேண்டுமென்றும் விரும் ாதாகவும், மோராத்தைத் தவிர மற்றச் சகோதரர் டமாளத் தகுந்தவர்களாகாமையால், தற்பொழி வநாடாமல் தான் மோராத்துக்கே உதவிசெய்வ கவும் பாசாங்குசெய்தான். ஔரங்கஜீபின் கப டம்.

மாராத் அவன் சொன்னதை நம்பி, அவனுடைய னையோடு சேரவந்தான். யஸ்வந்தசிங்கென்னும் ஜபுத்திரத் தலைவன் ஔரங்கஜீபை எதிர்த்துச் ண்டைசெய்வதற்காகத் தாராவினால் அனுப்பப் ட்டிருந்தான்; ஆனால், இவன் மோராத்தும் வந்து சர்ந்தால் இருவரையும் ஒருமிக்க ஜயித்துவிட மென்று நினைத்து, அவன் வந்து சேருகிறவரைக் ம் காத்திருந்தான். அவர்கள் இருவரையும் ஜயிக் லாமென்றிருந்த இவனையே அவர்கள் முற்றிலும் ரத்தியடித்தார்கள். யஸ்வந்த சிங்கை அவர்கள் தோற்கடித்தது. ஏபிரில்மீ.

3. அதி.

தாரா தோற்றது. இ. பி. 1658-ஷு ஜுன்மீ.

பின்பு அவ்வண்ணன் தம்பிமார் இருவரும் கூ
தாராவுடன் சண்டைசெய்ய வந்தார்கள். அவ
தனக்கே ஜயங்கிடைக்குமென்று வெகுவாய் நம்
யிருந்தபடியால் தன் பிள்ளை சாலிமான் உதவிய
வருகிறவரையிலும் பொறுமல் போர்செய்யத்தொ
ங்கப் பயங்கரமான சண்டைநடந்தது; அரசகு
ரர் யுத்தம் மும்முரமாய் நடக்கும் இடத்தில் பிர
சித்திருந்தார்கள்; மோராத்தினுடைய அவுதாவி
பேரிலே அம்புமாரி பெய்தது. கலகஞ்செய்தவ
ளாகிய சகோதரரிருவருக்கும் தற்செயலாய் ே
ட்ட ஒரு சங்கதியால் ஜயம் உண்டாகியது. அ
எப்படியெனில், யுத்தத்தின் பெரும்பாகத்தில் தா
உட்காந்திருந்த யானையைவிட்டு என்னகாரண
தாலேயோ தாரா கீழே இறங்கினான். அவனுடை
சேனை அவனுடைய அவுதா வெறுமையாயிருக்க
கண்டு, சேனாபதி மடிந்தானென்று எண்ணி, ப
மித்து உடனே வெருவி ஓடியது. ரணக்களத்தி
ஔரங்கஜீப் இன்னும் இருக்கையிலேதாலே
அவன் தன் மேலே தாசிபடிந்து ரத்தம் தாரைதான
யாய் வடிந்துவிழ மோராத்தினிடத்துக்கு ஓடி, ஜய
களிப்புக் கூறிச் சிங்காதனம் உமக்குக் கிடைத்
தென்று வாழ்த்தினான்.

ஔரங்கஜீப் தன்னைச் சக்கரவாத்தி என்று பிரசித்தப்படுத்தியது. இ. பி. 1658-ஷு ஆகஷ்டுமீ 20உ.

பின்பு அவர்கள் ஆக்ராவுக்குப் போய்ச் சேர்ந்து
அவர்களுடைய தந்தையாகிய ஷாஜிஹானைச் சிறை
பிடித்துக்கொண்டார்கள். இனி ரகசிய உபாயங்க
தேவையில்லையென்று கண்டு, ஔரங்கஜீப் ப
ரங்கமாய்ச் சக்கரவர்த்தி என்னும் பட்டத்தைத் தரி
துக்கொண்டு, மோராத்தைக் காவற்படுத்தி, துரை
தனத்தை வசப்படுத்திக்கொண்டான்.

ஆகிலும் அவனை எதிர்க்கத் திரண்ட சேனையோ
வந்துகொண்டிருந்த அண்ணனை ஷுஜாவுடன்

3. அதி.

கி. பி. 1659.

ன் போர்செய்ய வேண்டியதாயிருந்தது. வே
ரு பெருஞ்சண்டை நடந்தது; இதில் யஸ்வந்த
த என்னும் ராஜபுத்திரனுடைய துரோகத்தால்
ரங்கஜீப் தோல்வியடையும்படியாய் இருந்தது.
த யஸ்வந்தசிங்கை முன்பு இவன் தோற்கடித்
பிறகு மன்னித்திருந்தும், இவனுடைய பின்
ணிவகுப்பைத் துரோகமாய் வந்து தாக்கினான்;
லும் முடிவில் இவனுக்கே ஜயம் கிடைத்தது.
பக்கத்திலும் சேனை கலந்து யுத்தஞ்செய்கை
, ஔரங்கஜீபும் ஷூஜாவும் தத்தம் யானைமீது
று ஒருவனோடொருவனாய்ச் சண்டைபண்ணி
கள். ஷூஜாவினுடைய சேனாதிபதிகளில் ஒரு
தனது பிரபுவுக்குமுன் ஓடி, தன்யானையை ஔ
கஜீபின் யானைமீதுதாக்கி, அதை முழங்காலிட்டு
ாயும்படி செய்தான். அப்போது ஔரங்கஜீப்
ழ இறங்கப்போக, "நில்லும், சிங்காதனத்தை
டுக் கீழே இறங்கிப்போகலாமா?" என்று சொ
, அவனோடுவந்தவன் ஒருவன் தடுத்தான். அது
ட்டுச் சக்கரவர்த்தி இறங்காதிருந்தமையால் காப்
ற்றப்பட்டான். ஆனால் ஷூஜா அப்படி உறுதி
க நில்லாமல் தன் யானையைவிட்டு இறங்கினதி
லே தோல்வியடைந்தான். ஷூஜா சிலகாலம்
ரங்கஜீபுக்கு உபத்திரவம் செய்துவந்தும் கடை
ில் அவனால் துரத்தப்பட்டுத் தப்பித்து ஓடிப்
ாய், ஒரு ராஜாவினிடத்தில் அடைக்கலம் புக,
ந்த ராஜா அவனைக் கொலைசெய்துவிட்டான். இத
முன் கொஞ்சகாலம், அவனுடைய குமாரத்தி
னிடத்தில் அன்புவைத்து அவளுக்காகத் தகப்
ன் பக்ஷத்தைக் கைவிட்ட ஔரங்கஜீபின் குமார
ன மகம்மது அவனுக்கு உதவிசெய்ய, அது
ண்டு ஔரங்கஜீப் அவனைத் தோல்வியடைவித்

ஔரங்கஜீபும் ஷூஜாவும் சண்டை செய்தது.
1657-ஆம் ஜனுவரிமீ 3உ.

3. அதி.
கி. பி. 1658.

துப்பிடித்து அவன் மரணம்வரையிலும் சிறை
வைத்தான்.

தாராவின் முடிவு.

தாராவும் தன் தம்பிகையில் அகப்பட்டுக்கொ
டான். அவன் தப்பித்து ஓடப்பார்த்தான்; ஆ
அவனிடத்தில் இரண்டுதரம் உபகாரமடைந்தி
துரோகியான ஒரு தலைவன் அவனைப் பிடி
ஔரங்கஜீபினிடத்தில் ஒப்பித்தான். அவ
சிறையில் வைத்துப் பின்பு கொலைசெய்து

ஷாஜிஹான் மரணமடைந்தது.
கி. பி. 1666-ஞு டிசம்பர்மீ.

டான். சிலநாளைக்குப்பிற்பாடு, சிங்காதனத்தி
ந்து நீக்கப்பட்டிருந்த ஷாஜிஹான் மரணம் அ
தான். ஔரங்கஜீப் யாதொரு எதிரியும் இல்லா
பெரிய டில்லிராஜ்யத்திற்குச் சக்கரவர்த்தி ஆ

மகாராஷ்டிரர் எழும்பியது.

இப்படியிருக்க, தக்ஷிணத்தில் நூதனமாக
ஜாதியார் வெளிப்பட்டார்கள். இவர்கள் ப
யைச் சுற்றும் உள்ள மலைநாட்டாராகிய மகார
டிரர்கள். பல கோத்திரத்தாராகிய இவர்கள் த
ளுக்குள் தோன்றின பெரிய தலைவனாலே ஒரு
மையுள்ள சங்கமாக இணைக்கப்பட்டார்கள்.
ஷாவருஷம் அவர்கள் மேன்மேலும் பலத்
கொண்டார்கள். இவர்களாலே ஔரங்கஜீபு
அரசாண்டகாலமெல்லாம் முடிவில்லாத போர
டமுண்டாயிருந்தது. இவர்கள் பலப்பட்டதில்
தியாவை மகம்மதியரிடத்தினின்று மீட்டு, து
தனத்தை இந்து அரசருக்குத் திருப்பிக்கொடுப்
களென்று தோற்றியது.

அவர்கள் சண்டைசெய்யும் வகை.

அவர்கள் மோகலாயர் சண்டைசெய்வதுபோ
செய்யாமல், வேறுவகையாய் யுத்தம்பண்ணு
கள். அவர்களுடைய படைகளில் அதிக சுருசு
பும் வேகமுமுள்ள குதிரைவீரர்கள் விசேஷி
இருந்தார்கள். இவர்கள் அணிவகுத்து ஒழுங்க
நின்று யுத்தஞ்செய்யாமல் கிராமங்கள்தோறும்

3. அதி.

ாயடித்துக்கொண்டே வேகமாகச் செல்லுவார்
தங்களை யாராகிலும் எதிர்க்கவந்தால், தனித்
யாய்ப் பிரிந்து ஓடி, பிற்பாடு இன்னொரு இடத்
முன்போல ஒன்றாய்க் கூடிக்கொள்வார்கள்;
களைத் துரத்தச் சத்துருக்கள் சிதறித் தொடர்ந்து
ம்போது, அவர்களைத் தனித்தனியாய் எதிர்த்து
ர்களுடைய சாமானைக் காத்திருக்கும் சேவகர்
மேல் விழுந்தடிப்பார்கள். இவையெல்லாம் பார்
ம்பொழுது அவர்களைப் பலமும் யுத்தப்பிரியமு
ள ஒரு தேசத்தாரின் சேனையென்று எண்ண
, ஒரேதலைவனைச் சேர்ந்து கொள்ளையாடவே
மென்கிற ஒரேநோக்கங்கொண்டு திரிந்த பல
ளர்கூட்டங்கள் என்றே சொல்லவேண்டும்.

மேற்சொல்லிய மகாராஷ்டிர தலைவனுக்குச் சிவாஜி.
ாஜி என்று பேர். அவன் முதலில் கொஞ்சங்
ஞ்சமாய்க் கொள்ளையடித்து, பின்பு பெருங்
ள்ளைகளில் தலையிட்டு உயர்ந்த நிலைமைக்கு வந்
. நாள்வட்டத்தில் எதையும் தாங்கத்தக்க திட
ன கூட்டத்தாரைச் சேர்த்துக்கொண்டு, நாளுக்கு
பலமடைந்து, தன் சுயதேசத்திலுள்ள மலைக்
ட்டைகளை ஒன்றொன்றாய்ப் பிடித்துக்கொ
, கடைசியில் ஒரு பெரிய சீமைக்கு அதிபதி
, ஔரங்கஜீப் பயப்படும்படியான எதிரியா
ன்.

அவன் தேசத்துக்கு அருகில் இருந்த விஜயபுர அவனுடைய து
ாத்தனத்தார் அவனை ஜயிக்கவும், அவனுடைய ரோகத்தையும் கப
ம் விர்த்தியடையவொட்டாமல் தடுக்கவும் எத் டத்தையும் காட்டி
த்தார்கள். அவர்கள் அவனோடு சண்டைக்கு ய ஒரு உதாரணம்.
ுப்பிய சேனையை அவன் வென்றுவிட்டது எப்
யென்றால், தான் பயப்பட்டுக் கீழ்ப்படியச் சித்
ாயிருப்பதுபோலப் பாவித்து, எதிரி சேனாபதி
டு சமாதானம் பேசவேண்டுமென்றும், அதற்

3. அதி. காக இருதிறத்தாரும் யாதொரு ஆயுதமுமின்றி ஒ
சேவகனேடுமாத்திரம் வந்து ரகசியமாய்க் கூ
பேசவேண்டுமென்றும் சொல்லியனுப்பினன்.
ற்கு எதிரி ஒப்புக்கொண்டு, ஆயுதமின்றி வந்தா
சிவாஜிமாத்திரம் தன் தலைப்பாவின் கீழ் சிராவ
ணெடும் அங்கிக்குள் இலேசான பின்னற்கவச
பூண்டு, மிருகத்தின் நகம்போன்ற சிறிய ஆ
மொன்று தன் இடதுகையிலும், வலதுகைக் கவ
துக்குள்ளாகக் கைவாளும் வைத்துக்கொண்டு போ
னன். துலுக்கச் சேனைத்தலைவன் கிட்ட வரு
போது, மகாராஷ்டிரன் பயப்படுவதாகப் பாசாங்
செய்ய, அவன் இவனைத் தழுவவந்தான். அப்பொ
ழுது சிவாஜி ஆயுதம்பூண்ட தன் நகங்களாலே அ
னைப் பிடித்துத் தன் கைவாளால் குத்திக் கொன்
போட்டான். பின்பு அவன் சேனையானது ச
டை நடக்குமென்று கனவிலும் நினையாதிரு
எதிரியின் சேனைமேலே பாய்ந்து அதை முறிய
த்துவிட்டது.

சிவாஜி வெகு சீக்கிரத்தில் விர்த்தியடைந்தது. கி. பி. 1664.

இவ்வகையான துரோகத்தாலும், கபடத்தாலு
அவனது ராஜ்யம் விர்த்தியடைந்தது. அவனுடை
சேனை பெருகிவர, அச்சேனையை நடத்திக்கொ
டுபோய்த் தக்ஷிணமுழுவதும் கொள்ளையாடின
ஜூன் 6உ. 1664-ம்வருஷத்தில் அரசதிகாரத்தை அடைந்து,1674-
வருஷத்தில் தன்னை மகாராஷ்டிர மகாராஜன் என்
மிகுந்த கோலத்தோடு முடிசூட்டிக்கொண்டான்.

ஔரங்கஜீப் தட்சிணத்தில் நடத்திய யுத்தங்கள்.

இவன் மரணமடைந்தபிறகு, மகாராஷ்டிர
டைய அதிகாரத்தை இவனுடைய குமாரனும் பின்
பட்டத்துக்கு வந்தவர்களும் நிலைநிறுத்தினர்கள்
ஔரங்கஜீப் இனித்தான் ஆண்ட காலமெல்லாம்
நூதனமாய் எழும்பிய இச்சத்துருக்களோடு சண்டை

3. அதி.

வதே தொழிலாய்ப் போயிற்று. அச்சக்கரவர்த்தி யபுரம், கோலகொண்டை நாடுகளின் ராஜாக் ராடும் போர்செய்தான். கோலகொண்டை ரவை அவன் கோட்டையிலே எழுமாசம் றுகைபோட்டும் அந்த ராஜா வெகு சாமர்த் ந்தோடு தன்னுடைய கோட்டையைக் காத்துக் ண்டான்.

அவன் என்னசெய்தாலும் மகாராஷ்டிரர்கள் னுக்கு இணங்கவில்லை. அநேகவருஷகாலம் ன் தக்ஷிணத்திலேயே இருந்து அவர்களோடு டைசெய்துகொண்டிருந்தான். ஒரு பக்கத்தில் பட்டால் மற்றொரு பக்கத்தில் அவர்கள் வந்து ம்புவார்கள். சக்கரவர்த்தியின் சேனை பெரி ாதால், அது அவர்களைத் துரத்திப்பிடிக்க வேக ச் செல்லமாட்டாது.

ஔரங்கஜீப் ராஜபுத்திரர்களை விவேகத்தாழ்ச்சியாய் நடத்தினது.

அவன் ராஜ்யத்தின் மற்ற இடங்களிலும் அமளி உண்டாயின. அவன் மகம்மதுமதத்தில் அதிக தியுள்ளவனுகையால், தான் அநுசரித்த மதத் ப் பரவச்செய்ய மிகுதியான விருப்பங்கொண்டி தான். ஆனல் பலவந்தமாய் மற்றவர்களைத் தங்கள் க்கத்துக்கு உட்படுத்தவேண்டும் என்கிற மகம் யருடைய மதக்கோட்பாடானது ஒருவருக்காகி பிரியமில்லாததாயிருந்தது. அக்பர் முதலாக லியில் ஆண்ட எல்லாச் சக்கரவர்த்திகளும் ராஜ திரர்களை அன்பாயும், கண்யமாயும் நடத்திவந் கள். ஔரங்கஜீப் மாத்திரம் மதவெறிகொண்டு ர்களை உபத்திரவப்படுத்தி, அவர்கள் மகம்மது த்தை அநுசரிக்கும்படி பலவந்தம் செய்தது றி, அவர்கள் அப்படிச் செய்யாதபக்ஷத்தில், அக் யுக்தியாய்த் தள்ளியிருந்த வரியைச் செலுத்த ண்டுமென்று கட்டாயம்பண்ணினுன். ராஜ

3. அதி. புத்திரர்கள் இந்த மதியீனமும் அநியாயமுமான க
யங்களைப் பொறுக்கமாட்டாமல் மூர்க்கங்கொண்
கலகம் செய்தார்கள். அவன் உயிரோடிருக்கிறவ
யில் ராஜபுத்திரர்கள் அவனுக்கு மறுபடியும் கீழ்
படிந்து நடக்கவில்லை. அவனுக்குப்பின் பட்ட
கட்டிக்கொண்ட அரசர்களுக்கு இடர்வந்துற்ற
லத்திலும், யுத்தங்களிலும் உதவிசெய்ய மனமில்
மல், அவர்களை அந்த ராஜபுத்திரர்கள் கைவிட்ட
சக்கரவர்த்தி ராஜ்யம் சீக்கிரத்திலே குலைந்துபோ
தற்கு ஒரு எதுவாயிருந்தது.

ஔரங்கஜீப் மரணமடைந்தது. கி. பி. 1707-ஆ பிப்ரவரி மீ 21உ.

சண்டை பலமாய் நடந்துகொண்டும் அம
மிருந்துமிருக்கையில், ஔரங்கஜீப் மரணமடை
தான். ராஜ்யம் அவன் உயிரோடிருந்தபோதே தா
வடையத்தொடங்கியிருந்தது. அவன் இறந்தபிற
பட்டம் ஆளவந்தவர்கள் பேதையரும் மதியீன
மாய் அத்தனை பெரிய ராஜ்யத்தை அடக்
யாளச் சாமர்த்தியமில்லாதவர்களாய் இருந்ததின
ராஜ்யம் அதிவேகமாய் அழியும்படி நேரிட்ட
பார்சுதேசத்தரசனான நாதிர்ஷா படையெடுத்
வந்ததால், டில்லிராஜ்யம் இன்னும் விரைவா
அழிவதற்குக் காரணமாயிற்று. அவன் பை
யெடுத்துவந்தபோது செய்த பயங்கரமும் குரூர
மான காரியங்கள் தாமர்லேன் செய்தவற்றிற்கு
பெரும்பான்மை ஒத்தவைகளாயிருந்தன.

நாதிர்ஷா படையெடுத்தது. 1738-ஆ நவம்பர் மீ.

கஜினிகிட்ட ஒளித்துக்கொண்ட ஆப்கானிய
சிலரை டில்லிச்சக்கரவர்த்தி தன்னிடத்தில் ஒப்
விக்காமற்போனதற்காக அவன்மீது கோப
கொண்டு, நாதிர்ஷா படையெடுத்து டில்லிக்
வந்து, தனக்கு விரோதமாய் அனுப்பப்பட்ட சே
னையை ஜயித்து, டில்லிப்பட்டணத்தைக் கை
பற்றினான். இரண்டுநாள்வரைக்கும் ஒரு கலகமு
இல்லாமல் அமைதியாயிருந்தது. மூன்றும்நா

-வில் நாதிர்ஷா இறந்துபோனதாகச் சமாசார 3. அதி.
ண்டாக ஜனங்கள் அவனுடைய சேனையின்மே
) விழக் கொலையும் குரூர கிருத்தியங்களும் உண் இ. பி. 1739.
யின. மறுநாள் காலமே பார்சியருடைய பிணம் டில்லியில் நடந்த
-க்கிற எந்த வீதியிலும் குடிகள் எல்லாரையும் கொலை. 1739ஞ
ாலைசெய்யவேண்டுமென்று நாதிர்ஷா கட்டளை பிப்ரவரிமீ 13௳.
ட்டுக்கொண்டு குதிரையின்மீது தெருவுதெரு
யத் திரிந்துகொண்டிருந்தான். அந்தக் கட்ட
ப்படி ஏறக்குறைய முப்பதினாயிரம்பேர் கொல்
ப்பட்டார்கள். இப்படிக் கொடிய சங்காரத்தி
லே திருப்தியடைந்தவனாய் அளவற்ற தனத்தை
ரிக்கொண்டு நாதிர்ஷா திரும்பிச் சென்றான்.

இதற்குப் பிற்பாடு சக்கரவர்த்தி ராஜ்யம் முற்றும் முகலாய ராஜ்யபா
குலைந்துபோயிற்று. தக்ஷிணம் நிஜாம் என்னும் ரம் அழிந்தது.
லவனுடைய ஆளுகையில் இருந்தது; அவன்
தமாய்க் கீழ்ப்படியாமல் சுயாதீனனாகிவிட்டான்.
ங்காளத்தை மற்றொருவன் பிடித்துக்கொண்
ான். அயோத்தியை வேறொருவன் கைப்பற்றி
ன். பதினாறுவது நூற்றாண்டின் தொடக்கத்தில்
நனமாய் எழும்பியிருந்த சீக்குஜாதியார் பஞ்சாப்
ன்னும் பெரிய நாட்டைக் கைவசமாக்கிக்கொண்
ார்கள். மகாராஷ்டிரர்கள் மேன்மேலும் பலமடை
ுகொண்டு வந்தார்கள். அவர்களுடைய ராஜா
ியீனனாயும் அதிகாரமற்றவனாயுமிருந்து, அரம
ாயைவிட்டு வெளியில் புறப்படாமல் காவலில்
வக்கப்பட்டிருந்தும், சமஸ்தானத்தின் முக்கிய
திகாரிகளாகிய பூனாவில் இருந்த பேஷ்வா என்
ம் மந்திரியும், நாகபூரிலிருந்த சேனைத்தலைவ
ம் இந்தச் சூரரான ஜாதியாரின் பலத்தைக் குறை
ாமல் காப்பாற்றினார்கள்.

இக்காலத்தில் தோன்றிய வேறு ஒரு ராஜாங்கத் இங்கிலீஷ் அதி
ர் நாள்வட்டத்தில் மகம்மதியர், மகாராஷ்டிரர், காரம் உற்பத்தியா
னது.

3. அதி. சீக்கர் முதலான யாவரையும் ஜயித்து ஆளும்ப
வந்தார்கள். பதினேழாம் நூற்றுண்டில் மேற்கி
வெகு தொலையிலுள்ள ஒரு தீவிலிருந்து சில வி
பாரிகள் வந்து, இந்தியாவில் பலஇடங்களிலே நி
பெற்றார்கள். முதலில் தாங்கள் உத்தேசித்துவ
காரியமாகிய வியாபாரத்தைமாத்திரம் நடத்திக்கொ
ண்டுவந்தார்கள். கடைசியில் கத்தி எடுத்து யுத்த
செய்யத் தீரா அவசரம் நேரிட, நாளாவட்டத்தி
ஒரு பெரிய ராஜ்யத்தைச் சம்பாதித்து, மற்ற தேச
களையும் ஒவ்வொன்றுகக் கைவசமாக்கிக்கொண்
கடைசியாய் தேசமுழுமையும் அவர்கள் சொந்தமா
கிக்கொண்டார்கள்.

மகம்மதிய அரசர்களுடைய அதிகாரத்தில் இந்தியா இருந்தபோது அதன் ஸ்திதி.

இத்தேசத்தில் மகம்மதிய அரசர்கள் அரசாண்
காலத்தில் நடந்த முக்கியமான காரியங்களைக்குறி
துச் சொன்னோம். சில காலத்தில் நடந்த வர்த்
மானங்களைக்குறித்து ஆலோசிக்கும்போது, மிகவு
நடுக்கம் உண்டாகும். மற்றக் காலங்களில் அர
தனவந்தராயிருந்ததும் அல்லாமல், தேசத்தாரும் க்ஷே
மமாய் இருந்தார்கள். பேரோஜ்ஷா, ஷேர்ஷா, அ
பர் இவர்கள்தவிர மற்ற யாரும் குடிகளுக்கு க்ஷே
மம் உண்டாகவேண்டுமென்று கருதவில்லை. மாமூ
முதல், ஔரங்கஜீப்வரைக்கும் அரசாண்ட மகம்
தியருடைய ராஜாக்கள் காலத்திலெல்லாம் கொ
மையான ராஜாக்கள் செய்த குரூரங்களினாலு
இடைவிடாமல் ஜனங்களுக்குள் உண்டான க
கங்களினாலும், தாறுமாறுகளினாலும், சட்டதிட்ட
களை அநுசரியாத துஷ்ட அதிகாரிகள் செய்த அ
தங்களினாலும் வியாகுலப்பட்ட இந்தியாவில், க
டாந்தகாரத்தினால் மூடப்பட்ட வானத்தில் இங்
மங்கும் சொற்ப நக்ஷத்திர ஒளியிருக்கிறதுபோ
சிலவேளை சொற்ப க்ஷேமமுண்டாயிற்று.

4—ம் அதிகாரம்.

இந்தியாவில் ஐரோப்பியர் முதல்முதல் வந்த வர்த்தமானம்.

கி. பி. 1744-ஆ வரைக்கும்.

இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் இருந்த சம்பந்தம்.

கிழக்குத்தேசங்களில் இங்கிலாண்டு தேசத்தாருடைய அதிகாரம் விர்த்தியடைந்த வரலாற்றை ...ரிக்குமுன்னே, முற்காலத்திலே இந்தியாவுக்கும் ஐரோப்பாவுக்கும் உண்டாயிருந்த சம்பந்தத்... தெரியப்படுத்துவது பிரயோஜனகரமாம். மே... சொல்லியிருக்கிறபடி, இத்தேசமானது பூர்வத்... வியாபாரத்திலும் ஐசுவரியத்திலும் மிகவும் ...பெற்றதாயிருந்தது; மேலும் அதன் சரக்குகள் ...ரப்பாவில் மிகவும் பிரியமாய்க் கொள்ளப்பட்டு ...ன. என்றாலும், கிரேக்கர் முதலாவது, இரண்...து நூற்றாண்டுகளில் இரண்டொருவிசை இந்...வுக்குக் கப்பல்யாத்திரை செய்துவந்ததேதவிர, ... எக்காலத்திலாவது ஐரோப்பாவிலிருந்து வியா...கள் இந்தியாவுக்கு நேராய் வந்ததாக எந்தச் ...திரத்தாலும் தெரியவரவில்லை. இந்தியாவின் ...துகளை மத்திய ஆசியாவின் பூமிமார்க்கமாய் ...பாரிகள் கொண்டுபோய் மெடிடிரேனியன் ...யோரங்களிலுள்ள துறைமுகப் பட்டணங்க... சேர்ப்பார்கள். சிலவேளை, அரபி வியாபாரி... பார்சுக்குடாக்கடலுக்கும், செங்கடல் என்னும் ...பிக்குடாக்கடலுக்கும் சரக்குகளைக் கொண்டு...ய்ச் சேர்க்க, அங்கிருந்து வியாபாரிகளின் கூட்...ார் இஜிப்ட் நாட்டிலும், ஸிரியா நாட்டிலு...ள துறைமுகங்களுக்குக் கொண்டுபோவார்கள்.

4. அதி.

அங்கே அச்சரக்குகளை ஐரோப்பாவின் வியாப
கள் கொள்ளுவார்கள். *மத்தியகாலங்களில் இ
வியாபாரத்தை நடத்தியவர்கள் ஐரோப்பாவில் மு
கியமாய் ஜினோவா, வெனிசு என்னும் பெரிய கு
யரசு நாடுகளில் இருந்தவர்களாம். இந்த இல
முள்ள வியாபாரத்தினாலே அந்த இரண்டு குடிய
நாடுகளும் மிகுந்த தனத்தையும் பலத்தையும் பெ
றன.

துணிந்து கப்பல் யாத்திரை செய்த காலம்.

பதினைந்தாம் நூற்றாண்டின் கடைசியிலே, ஐரோ
பாவில் எங்கும் ஜனங்களுக்குள் ஊக்கமும் துணி
ரமுமான காரியங்களில் பிரவேசிக்கவேண்டுமெ
னும் ஆவல் உண்டாகியது. இவ்வகையான பிர
தனங்களால், போர்டியூகல், ஸ்பேன் ராஜாங்க
ளுக்கு முதலில் பலன் கிடைத்தது. அத்தேச
ளின் மாலுமிகள் அநேகர் போய், ஐரோப்பியர் அ
வரையிலும் பார்த்திராத தேசங்களைக் கண்டுபி
தார்கள்.

கேப் அவ் குட் ஹோப்பைக் கண்டுபிடித்தது. கி. பி. 1487-ஆ.

போர்டியூகல் தேசத்தார் ஆபிரிக்காகண்டத்தி
மேற்புறக் கடலோரங்களிலுள்ள நாடுகளைப்
சோதனை செய்துவர, ஒவ்வொரு கப்பல் ய
திரையிலும், அந்த விஸ்தீரணமான கண்டத்தி
தன்மையை அவர்கள் மேன்மேலும் அதிக தி
டமாய் அறிந்துகொண்டார்கள். கடைசியில்
சிறிய கப்பற்கூட்டத்துக்குத் தலைவனாயிருந்த போ
டியூகல் தேசத்தானாகிய பார்த்தலோமியூ டி
என்பவன் அந்தக் கண்டத்தின் பிரசித்தமான தெ
முனைவரையிலுஞ்சென்று அதைச் சுற்றிப்போ
னான். அந்த முனையின் கிட்ட அவன் வரும்போ
கடல் அதிக கொந்தளிப்பு எடுத்தமையால் அ

---

* கி. பி. 900-ஆம்த்துக்கு முற்பட்ட காலம் பூர்வகாலம் என்றும், அது
15-ம் நூற்றாண்டுவரைக்கும் மத்தியகாலம் என்றும், பின்காலம் நூதன
என்றும் சொல்வார்கள்.

ஊக்குப் "புசல்முனை" என்று பேர்வைத்தான். 4. அதி.
லும் இப்படி அந்த முனையைக் கண்டுபிடித்த
, இந்தியாவுக்குச் சென்று நல்லலாபம் சம்பா
லாம் என்னும் கோரிக்கை தனக்கு உண்டா
தைப்பற்றிப் போர்ட்டியூகல் தேசத்து அரசன் சந்
ஷமடைந்து, அந்த முனைக்கு அப்பேரை மாற்றி,
போது அதற்கு உண்டாயிருக்கிற "கேப் அவ்
ஹோப்" அல்லது "நன்னம்பிக்கை முனை"
னும் அர்த்தங்கொள்ளும் இன்பமான பேரை
டான்.

தற்காலத்துக்குச் சித்தியின்மை.

பார்ட்டியூகல் தேசத்தார் இம்முனையைக் கண்டு
த்ததினால் உடனே அவர்களுக்கு ஒரு பிரயோ
மும் இல்லை; இந்தியாவுக்கு அவ்வழியாகப்
கலாமென்று எண்ணப்பட்டிருந்த அப்பாதை
உபயோகப்படுத்திக்கொள்வதற்குத் தகுந்த
திரை சித்தமாவதற்குப் பத்துவருஷஞ்சென்றது.

இப்படியிருக்கையில், அவர்களுக்கு அடுத்த
த்தாரும் போட்டிக்காரருமாகிய ஸ்பேன் தேசத்
அவர்கள் செய்துவந்ததிலும் அதிக துணிவான
ல்யாத்திரை செய்துமுடித்தார்கள். அவர்களில்
கூட்டத்தார் கிரிஸ்டோபர் கொலம்பஸ் என்ப
ல் நடத்தப்பட்டு, புதிய உலகமென்னப்பட்ட
புற அர்த்தகோளத்திலுள்ள தீவுகளைக் கண்டு
ந்தார்கள். அவர்கள் கண்டுபிடித்த தேசங்களை
யாவில் ஒரு பாகம் என்று முதலில் நினைத்து,
ர்கள் இத்தேசத்துக்கு அத்தீவுகளின் வழியாக
ாய் வரலாமென்று முதலில் நம்பியிருந்தார்கள்.
விதமாய் மேல்திசையிலுள்ள தீவுகளைக் கண்டு
ந்த முக்கியமான சங்கதியினால், ஐரோப்பாவில்
நம் அதற்கு முன்னே சிலநாளாய் உண்டாகிக்
ண்டிருந்த துணிவுள்ள கப்பல்யாத்திரை செய்ய

அமெரிக்கா கண்டு பிடிக்கப்பட்டது. கி. பி. 1492-ஞ.

4. அதி.

இ. பி. 1492.

வேண்டும் என்கிற வாஞ்சையானது மிகவும் பெ
கியது. ஸ்பானியதேசத்தார் அமெரிக்க சீமைகளை
பரிசோதித்துக்கொண்டு வருகையில், போர்டியூக
தேசத்தார் தங்களுடைய யுக்திசாலியான அரச
கிய இம்மானுவேல் என்பவனுடைய கட்டளை
படி கிழக்குத்திசையில் நூதனமான தேசங்களை
கண்டுபிடிக்க முயற்சிசெய்தார்கள்.

கேப் அவ் குட் ஹோப்பைச் சுற்றி இந்தியாவுக்குமுதற் கப்பல் யாத்திரை செய்தது.
இ. பி. 1497–ஷு.

1497–ஷு ஜூலைமாசத்தின் தொடக்கத்திலே (
தியாவின் கடற்கரையோரத்துக்குக் கேப் அவ் (
ஹோப்பைச் சுற்றிச் செல்லும்படியாக உத்த
பெற்றுக்கொண்டு, மிகவும் தேறின கப்பல் தலை
னாகிய வாஸ்கோடிகாமா என்பவன் மூன்று க
லுக்கு அதிபதியாக, லிஸ்பன் நகரத்திலிருந்து க
லோட்டிவந்தான். வாஸ்கோடிகாமாவும் அவ
டன் வந்தவர்களும் கப்பல்யாத்திரை செய்து, ஆ
ரிக்காவில் அநேக இடங்களைப் பார்த்துக்கொண்
பதினொரு மாசத்துக்குப்பிறகு மலையாள சமுத்தி
கரையிலே கள்ளிக்கோட்டையில் இறங்கினார்க
அங்கே அவன் *"தம்பிரான்" என்றழைக்கப்பட்
அந்நாட்டு அரசனோடு சகவாசம்பண்ணப் பிரய
னஞ்செய்தான். அந்த அரசன் முதலில் அவனை
தயவாய் நடப்பிக்க மனதுள்ளவனாயிருந்தும், ம
மதிய வர்த்தகர் போர்டியூகல் தேசத்தாரை விரோ
கும்படி அவனுக்குப் போதனைசெய்தார்கள். வா
கொடிகாமாவைக்கூட அந்த அரசனுடைய உ
யோகஸ்தர்களில் ஒருவன் சிறையில் வைத்தா
ஆனால் அவன் சீக்கிரத்தில் விடுதலையாகி அவனு
குச் சாதாரணமாய் அநுகூலமாக இருந்த குடி
ணக்காரர்களிடத்தில் சரக்கை விற்பனைசெய்
விட்டு, போர்டியூகலுக்குப் புறப்பட்டுப்போனா

* தம்பிரான் என்பது ஸாமொரீன் என்பதாகத் திரிந்தது.

படி அவன் கப்பல்யாத்திரை செய்துகொண்டு, 4. அதி.
படி சுதேசத்தில் சேர, இரண்டு வருஷம் இரண்
தம் சென்றன. மொகலாய ராஜ்யத்தை ஸ்தா
:வனுன பாபர் தனது சுதேசத்திலே சிங்காதன
ின காலத்திலும், மகம்மதியரின் அதிகாரம்
் இந்தியாவில் வியாபித்ததற்கு முன்னும் இந்த
கியமான கப்பல்யாத்திரையானது செய்யப்பட்

ாஸ்கோடிகாமா ஐரோப்பாவுக்குத் திரும்பி
பிறகு, போர்டியூகல் தேசத்து அரசன் அவனு
விசேஷ மரியாதையும், வெகுமதியும் செய்
. அவ்வளவு க்ஷேமமாய் ஆரம்பஞ்செய்யப்
_ சம்பந்தத்தைத் தொடர்ந்து நடத்திவர முன்பு
ப்பியதிலும் அதிக பலமான பிரயத்தனங்களு
மற்றொரு கப்பற்கூட்டம் ஆயத்தம்பண்ணப்
_து. இந்தக் கப்பற்கூட்டத்துக்கு அதிபதி
ச் சென்ற காபிரால் ஆபிரிக்காவின் மேற்குக்
அணுகாமலிருப்பதற்காக மேற்கு நோக்கிக்
ல்களை நடத்தப் புசலினுல் அடித்துக்கொண்டு
கப்பட்டு, அங்கே பிரசில் என்னும் நாட்டைக்
டுபிடித்தான். அது பிற்காலத்தில் போர்டியூக
 வெகு அருமையான காணியாட்சியாகியது.
னயும் கள்ளிக்கோட்டையின் தம்பிரான் முத
தயவாக நடத்தி, அப்பட்டணத்துக்குச் சமீபத்
ஒரு வர்த்தகசாலையைக் கட்டிக்கொள்ள அவ
ு உத்தரவுகொடுத்தான்; ஆனுலும் போர்டியூ
தேசத்தாருடைய துர்நடத்தையாலும் மகம்மதிய
பாரிகளுடைய பகையினுலும் முன்னதைவிட
 விரோதஞ்செய்யப்பட்டது. புதிதாய் ஸ்தா
ப்பட்ட வர்த்தகசாலை இடித்துவிடப்பட்டது.
ரால் அப்பட்டணத்திலும், அதன் கப்பல்களி

காபிராலினுடைய கப்பல் யாத்திரை. அவன் சமரீனுடன் சண்டைசெய்தது. இ. பி. 1500.

4. அதி.

இ. பி. 1500.

லும் ஒரு பங்கை நாசஞ்செய்து பழிதீர்த்
கொண்டு, கோச்சிக்குப் புறப்பட்டுச் சென்ற
அவ்விடத்து அரசன் தம்பிரானுக்குக் கீழ்ப்பட்ட
ளுகிலும், உள்ளபடி அவனுக்கு விரோதியாயி
தான். காபிரால் கொச்சித்துறையில் தனது கப்
களில் சரக்கேற்றிக்கொண்டு போர்டியூகலுக்
திரும்பிப்போய், இத்தேசத்தார் தனக்குச் செ
விரோதத்தையும் பகையையும் தன்னரசனுக்கு அ
க்கைசெய்தான்.

வாஸ்கொடிகாமாவின் இரண்டாம் யாத்திரை.

இம்மானுவேல் அரசன் கிழக்குத்தேசத்தில் த
க்கு ஒரு ராஜாங்கத்தை ஸ்தாபிக்க ஆசைகொண்
அதுவரையிலும் இந்தியாவுக்குப் போய்வந்த
விட, அதிக பலமுள்ள பெரிய கப்பற்படைை
ஆயத்தஞ்செய்து, நெடுநாள் கப்பல்யாத்திரைசெ
தேறின மாலுமியான வாஸ்கொடிகாமாவை மு
கிய அதிகாரியாக நியமித்தான்.

போர்டியூகலுக்கும் இந்தியாவுக்கும் இருந்த சம்பந்தம்.

இதுமுதலாகச் சிலவேளை வியாபாரத்தின் நி
ருட்டாகவும், சிலவேளை யுத்தம் நடத்திவரும்படி
கவும் போர்டியூகலிலிருந்து இந்தியாவுக்கு அடிக்க
கப்பற்சேனைகள் அனுப்பப்பட்டுவந்தன. வியா
ரத்துக்குச் சாதாரணமாய்க் கோச்சி, கன்னனு
துறைமுகங்களுக்குப் போனார்கள். கோச்சி ரா
வுக்கு விரோதமாக இரண்டுதரம் படையெடுத்
வந்த ஸாமோரீனை ஜயிக்கத்தக்கதாக இவர்க
உதவிசெய்ததினாலே போர்டியூகல் படைச்சேன
ருடைய சிறிய தண்டின் தைரியத்தாலே ஸாமோ
ரீன் தோல்வியடைந்தான்.

ஆல்பான்ஸோ ஆல்பியூகர்க்.

இ. பி. 1510.

கொஞ்சக்காலத்துக்குமுன்னே இந்தியாவுக்கு அ
தியக்ஷனாக நியமிக்கப்பட்டிருந்த ஆல்பான்ஸோ
ஆல்பியூகர்க் என்பவன் போர்டியூகல் தேசத்த
அடைந்திருந்த ராஜ்யங்களுக்கு 1510-ம் வருஷத்தி

கியமான அதிகாரத்தைப் பெற்முன். அவன் அ 4. அதி.
புள்ளவனும், சாகசத்தையும், பெருமையையும் நா இ. பி. 1510.
வனுமாம். அவன் வெகுநாளாய் தேசங்களை ஜயி
ஆளவேண்டுமென்று செய்துகொண்டிருந்த எற்
களை நிறைவேற்றத் துவக்கினுன். போர்டியூகல்
த்தாரின் கப்பல்கள் எல்லாம் நிற்கிறதற்கு ஏற்ற
மாகவும், அவர்கள் ராஜ்யத்துக்கு ராஜதானியாக
ருக்கும்படி அபாயமில்லாத ஒரு அரணுன துறை
த்தைப் பிடித்துக்கொள்வது அவன் முக்கிய
க் கொண்ட கருத்து. முதலில் அவன் கள்ளிக்
ட்டையைக் கைப்பற்ற எத்தனிக்க, அங்கிருந்த
ள் அவனை வெகு சேதப்படுத்தி அடித்துத் துர பிப்ரவரிமீ 25உ.
பிட்டார்கள். பின்பு கோவா என்னும் இடத்
அதின் அரசன் இவனுக்கு யாதொரு தீங்குஞ்
யாமலிருக்க, அவன் அப்புறம் போயிருக்கிற
ணம்பார்த்துக் கைப்பற்றிக்கொண்டான். அது
கு கடற்கரையோரத்தில் நடுமையத்திலிருந்
யால் அவனுடைய நோக்கத்திற்கு மிகவும்
சந்ததாயிருந்தது. இப்படி அவன் வசமான
க் கோவா கிழக்குத் தேசங்களில் போர்டியூகல்
யத்திற்கு நெடுங்காலம் ராஜதானியாக இருந்த
ன்றி, இந்நாள்வரையிலும் அத்தேசத்தார்வசமா
இருக்கின்றது.

பின்பு அவன் மலாயாவிலிருக்கும் மலாகா போர்டியூகல் தே
யும், பார்சுக்குடாக்கடலிலுள்ள ஆர்மஸ் சத்தாரின் ராஜ்யம்.
வயும் பிடித்துக்கொண்டான். அவை இரண்
வியாபாரகாரியங்களுக்கு வெகு தகுதியான
ங்கள்; 1515-ம் வருஷத்தில் அவன் இறந்தபோது,
ர்டியூகல் தேசத்தாருக்குக் கீழ்த்திசையில் உண்
ன ராஜ்யம் பூரணமான விஸ்தாரத்தைப் பெற்
ந்தது. இந்தியாவில் அத்தேசத்தாருக்கு உண்

4. அதி. டாயிருந்த வர்த்தகசாலைகளும், கோட்டைக
அநேகமல்ல; ஆகிலும், அவர்களுடைய கப்ப
ளுக்கு இந்துசமுத்திரம் வசமாயிருந்ததுமன்றி, இ
தியாவிலிருந்து சரக்குகளை ஐரோப்பாவுக்குத் த
களே ஏற்றி அனுப்புகிறதென்று கட்டுப்பாடு ப
ணியிருந்தார்கள்.

இந்தியாவில் உலாந்தாக்காரர் செய்த வியாபாரம்.

பதினாறாவது நூற்றாண்டின் கடைசியில், உல
தாக்காரர் வாசனைத் திரவியத்தீவுகள் என்று செ
ருள்படும் "ஸ்பைஸ் ஐலண்ட்ஸ்" என்பவற்றிலு
இந்தியாவிலும் நடக்கும் வியாபாரத்தில்பிரவே
கத்தொடங்கினார்கள். இவர்களும் போர்டியூகல்
சத்தாரைப்போலவே வியாபாரத்துக்கு மிகவும் மு
க்கியமான இடங்களில் வர்த்தகசாலைகளைக் கட்டி
கொண்டு, அவர்களுக்கு மிகவும் பலமான போ
டிக்காரரானார்கள்; இவர்களும், பின்னும் சில தே
ட்டிக்காரரும் இத்தேசத்திலே வரத் தலைப்பட்
பிறகு, போர்டியூகல் தேசத்தாருக்கு அதிகாரமு
இலாபமும் வரவரக் குறைந்துபோயின. உல
தாக்காரர் முக்கியமாய் இந்தியாவைச்சார்ந்த
தீவுகளில் வியாபாரம் நடத்திவந்தார்கள்; அவர்க
ஜாவாதீவின் வடகரையோரத்தில், படேவி
என்னும் பட்டணத்தைக் கட்டி, அதைக் கிழக்கு
தேசங்களிலே தங்களுக்குள்ள காணியாட்சிக்
ராஜதானியாக்கினார்கள். ஆகிலும், பின்பு அ
கள் இந்தியாவில் நாகபட்டணம், பழவேற்கா
சின்சுரா முதலான இடங்களை ஏற்படுத்
கொண்டார்கள்.

இந்தியாவில் இங்கிலாண்டு தேசத்தார் செய்த வியாபாரம். இ. பி. 1600.

உலாந்தாக்காரர் போர்டியூகல் தேசத்தாருக்கு
போட்டிக்காரர் ஆனகாலத்தில் இங்கிலாண்டு தே
தாரும் அந்த லாபமுள்ள வியாபாரத்தில் தாங்கள
பங்கிட்டுக்கொள்ள முதலில் முயற்சிசெய்தார்க

கள் வியாபாரம் செய்வதற்கு நேரான வழியைக் 4. அதி.
டுபிடிக்கவேண்டுமென்று முன்னமே பிரயத் இ. பி. 1600.
ப்பட்டிருந்தார்கள்; ஆனாலும் அது பயன்படா
ரும், உலாந்தாக்காரரும் போர்டியூகல் தேசத்
ம் அநுசரித்த மார்க்கத்தையே அநுசரித்தால்
தங்கள் காரியம் முடியுமென்றும் உடனே
டுகொண்டார்கள். லண்டன் பட்டணத்து
தகர்களில் சிலர் இதற்காகப் பதினாறும்நூற்
ாடின் கடைசிவருஷத்தில் ஒரு பங்குகூடி
க்த இந்தியாவில் வியாபாரஞ்செய்யும் கவர்
ம் வியாபாரக்கூட்டத்தாரும்" என்னும் பெய
கி. பி. 1600-ம் ஹுத்தில் சார்ட்டர் என்னும் டிசம்பர்மீ 31உ.
காரப்பத்திரிகையைப் பெற்றார்கள். எலிசபேத்
பவள் இங்கிலாண்டுக்கு அரசியாகவும், அக்பர்
பிக்குச் சக்கரவர்த்தியாகவும் இருக்கும் காலத்
இவ்விதமாக ஈஸ்ட் இண்டியா கம்பேனி
இந்தப் பலத்த வியாபாரக்கூட்டம் ஏற்பட்

ங்கிலாண்டு தேசத்தாரும், உலாந்தாக்காரரும், மூன்றுதேசத்தாரும் போராட்டஞ்செய்துவந்தது.
ர்டியூகல் தேசத்தாரும் அநேக வருஷகாலமாய்
க்கடி ஒருவரோடொருவர் யுத்தம்செய்துகொ
இருந்தார்கள். இந்த மூன்று தேசத்தாரும்
யாவில் பகையில்லாமலே நன்றாய் முயற்சிசெ
லாபத்தோடு வியாபாரம் நடத்தத் தகுதியான
களிருக்க, அதை யோசியாமல் அவர்கள்
இழிவாய்ப் போட்டியும் பகையும் செய்து
ார்கள். அவர்களுக்குள் கப்பற்கொள்ளை சாதா
ாய் நடந்ததுமன்றி, அவர்கள் ஒருவனையொரு
அடிக்கடி வெகு குரூரமாய் நடத்தினார்கள்.
டி அவர்கள் பொறாமைப்பட்டுவந்ததற்கு அம்
நாவில் செய்த பெருங்கொலை மிகவும் விசன

4. அதி. கரமான திருஷ்டாந்தமாம். இங்கிலாண்டு தே
திலும், உலாந்தாதேசத்திலும் உண்டாயிருந்த ஈஸ்
இண்டியா கம்பேனிகள் தங்கள் தேசத்து வர்த்த
கள் சமாதானமாயும் சிநேகமாயும் வர்த்தகம் நட
வேண்டியதென்று முன்னாடி உடன்படிக்கை செ

அம்பாய்நாவில் நடந்த பெருங்கொலை. இ. பி. 1623.

துகொண்டிருக்க, அதை எண்ணமல் அம்பாய்
வில் உலாந்தாக்காரர் வைத்திருந்த காப்புச்சே
யானது அங்கிருந்த சில இங்கிலீஷ்காரரை
அவர்களை அநுசரித்திருந்தவர்களையும் யாதொ
நிமித்தமுமின்றிக் கொலைசெய்துவிட்டது.

இங்கிலாண்டு வியாபாரிகளுக்குள்ளே நடந்த போட்டி.

இங்கிலாண்டு தேசத்து ஈஸ்ட் இண்டியா கம்
னியார் பிறதேசத்து எதிரியோடு போராடினது
லாமல், தங்கள் சொந்தத் தேசத்தாரோடும் போர
நேரிட்டது. சில்லறை வியாபாரிகள் அவர்க
டைய வியாபாரங்களுக்கு இடையூறாக உத்தர
லாமல் வியாபாரஞ் செய்யவந்தார்கள். அன்றி
பதினேழாவது நூற்றாண்டின் கடைசியில் அவ
ளுக்கு இந்தியாவில் இருந்த காணியாட்சிகளி
இங்கிலாண்டிலும் அவர்கள் தங்கள் காரியங்க
செவ்வையாய் நடத்தாமற்போனதால், லண்
பட்டணத்திலுள்ள சில வியாபாரிகள் எதிரான
பெனி ஒன்றை ஏற்படுத்த இடம் உண்டாகி
இவ்விரண்டு கட்சிகளில் ஒரு கட்சிக்காரர் ம
கட்சிக்காரரைக் கலைத்துவிடவும், தங்களு
கம்பெனிக்காகவே இந்தியாவில் பூரணமான
தியத்தை உண்டாக்கத்தக்க அதிகாரப்பத்தி
யை இங்கிலீஷ் துரைத்தனத்தாரிடத்தில் சம்பா
கவும் ஊக்கத்தோடே முயற்சிசெய்தார்கள். இ

1702-ஆ ஜூலைமீ 22உ.

அவமானமான சண்டைகள் 1702-ம் ஆ வரை
நடந்தன. அவ்வருஷத்தில் இரண்டு கட்சியா
அச்சண்டைகளினால் தங்கள் இருவருக்கும் செ

4. அதி.

டாயிற்றென்று கண்டுகொண்டு, ஒருவரோ
ாருவர் ஐக்கியமான ஏற்பாடு பண்ணிக்கொ
, அதுமுதல் ஐக்கியமான கிழக்கு இந்தியக்
டத்தார் என்று கருத்தாகும் யூனைடேட் ஈஸ்ட்
ாடியா கம்பேனி என்னும் வியாபாரசங்கத்தை
டுத்திக்கொண்டார்கள். அவர்களுக்குள்ள கல
ம் சச்சரவும் 1708-ம் வருஷத்தில் முற்றும் நீங்
போயின.

1708-ஆு செப்டம்பர் 29உ.

ியாபாரம் நடத்துவதற்கு முதற்பணம் போட்ட
ாளிகளின் கூட்டமே அந்தக் கம்பெனி
. இவர்களுக்குள் இருபத்துநான்கு பெய
அந்தக் கம்பெனியாருடைய காரியங்களை
துவதற்கும், அவர்களுடைய வியாபார வேலை
ன்பேரில் மேல்விசாரணை செய்துகொள்ளுவ
ம் "டைரெக்டர்கள்" என்னும் அதிகாரிகளாக
ித்தார்கள். நாள்வட்டத்தில் சற்றே மாறியிருந்
இந்த ஏற்பாடுகள் 1858-ம் ஆுத்தில் இத்தேசத்
ஆளுகை அரசாட்சியின் வசத்தில் ஒப்புவிக்
டுமளவும் நடந்துவந்தன.

ஒருமைப்பட்ட கிழக்கு இந்தியாவின் கூட்டத்தார். கி.பி. 1702 முதல் 1858-ஆு வரைக்கும்.

ப்படி ஒருமைப்பட்ட சங்கத்தார் இந்தியா தே
ல் உண்டான வியாபாரத்தையே முக்கியமாய்க்
ரித்துக்கொண்டுவந்தார்கள். இங்கிலீஷ்காரர்
லில் முக்கியமாய் வாசனைத் திரவியத்தீவுகளில்
பாரம் நடத்திவருகையில், மேலே சொல்லிய
உலாந்தாக்காரர்களுக்கும், அவர்களுக்கும் அங்
ண்டைநேரிட்டுக்கொண்டேயிருந்தது; ஆனால்
கள் அவ்விடத்து வியாபாரத்தை மிகவும் சுறு
புள்ள தங்கள் போட்டிக்காரர்களாகிய உலாந்
ாரருக்கு விட்டுவிட்டு, இந்துஸ்தானத்திலே பல
ங்களில் வியாபாரச்சாலைகளை ஏற்படுத்திக்கொ
ார்கள். 1639-ம் ஆுவரைக்கும் வியாபாரக்காரி

4. அதி. யங்களுக்கு உதவியாக மாளிகைகளைமாத்திர

மதிராசு—சென்ன பட்டணம். இ. பி. 1639.

கட்டிக்கொண்டு அவைகளில் இருந்தார்கள்; போது சேன்னை என்னப்படும் பட்டணத்தில் திரகிரி ராஜாவின் உத்தரவின்பேரில் ஒருகோட்டை யைக் கட்டிக்கொண்டார்கள். இதற்குச் சில முன்னதாக நெல்லூருக்குத் தெற்கே முப்பது தூரத்தில் ஆறுமுகம், அல்லது தியாகராஜபட்டன என்னும் இடத்தில் அவர்கள் ஒரு வர்த்தகசா லையைக் கட்டிக்கொண்டிருந்தார்கள்; ஆனாலும் வியாபாரத்துக்கு அநுகூலமான இடமல்லவெ அதை விட்டுவிட்டார்கள்.

பம்பாய். இ. பி. 1662.

பம்பாய்த் தீவு 1662-ம் ஸூத்தில் இங்கிலா அரசனான இரண்டாவது சார்ல்ஸ் போர்டியு தேசத்து ராஜகுமாரத்தியான கத்தரீன என்பவ கலியாணஞ் செய்துகொண்டபொழுது, அந்த குமாரத்திக்குப் பரிசமாக அவனுக்கு வந்தது. இ குச் சில வருஷம் சென்றபிறகு வருஷாவரு அரசனுக்குச் சில பணத்தொகை செலுத்துவ

இ. பி. 1668.

று உடன்படிக்கை பெற்றுக்கொண்டு, அந்தத் தீ அவன் கம்பெனியாருக்கு ஒப்புக்கொடுத்தான்.

ஸேண்ட் டேவிட் கோட்டை.

புதுச்சேரிக்குத் தெற்கே பதினாறு மைல் தெ விலும், கூடலூருக்குச் சமீபத்திலுமிருக்கிற னும் பட்டணத்தில் ஸேண்டு டேவிட் என் கோட்டை கட்டப்பட்டது. அப்பட்டணத் கம்பெனியார் விலைக்கு வாங்கிக் கொஞ்சக்கா துக்குள்ளாகக் கிழக்குக் கடற்கரையோரத்தில் களுக்கு முக்கியமான இடமாக்கினார்கள்.

கல்கத்தா. இ. பி. 1700.

அவர்கள் கல்கத்தா என்னும் இடத்தில் கொ நிலம்வாங்கி 1700-ம் ஸூத்தில் போர்ட்டு வில் என்னும் கோட்டையைக் கட்டிக்கொண்டார் சில நாளைக்குப்பின் இங்கிலீஷ்கார வைத்திய

மில்டன் என்பவன் அப்போது அரசாண்டு 4. அதி.
ண்டிருந்த சக்கரவர்த்திக்கு வைத்தியஞ்செய்து கி. பி. 1700.
ஸ்தப்படுத்தினதால், கல்கத்தாவையும், மதிரா
யும் சுற்றி அதிக நிலம் சம்பாதித்துக்கொள்ளும்
இங்கிலீஷ்காரருக்கு உத்தரவாகியது.

ஸ்ட் இண்டியா கம்பெனியாருக்கு இப்போது இந்தியாவில் பிரா
ஒருரு போட்டிக்காரர் உண்டானார்கள்; உலாந் ஞ்சுக்காரர் நிலையான இடங்களை ஏற்ப
காரரோடும், போர்டியூகல் தேசத்தாரோடும் செ டுத்திக்கொண்டது.
சண்டைகளைவிட பலமான சண்டைகளை இங்
ஷ்காரர்கள் பிற்காலத்தில் அவர்களோடு செய்ய
ரிட்டது. 17-வது நூற்றாண்டின் நடுவில் இங்
ாண்டு தேசத்தாரையும், உலாந்தாக்காரரையும்
த்துப் பிராஞ்சுக்காரர் தாங்களும் ஒரு ஈஸ்ட்
ண்டியா கம்பெனி ஏற்படுத்திக்கொண்டு, சூரத்
ஒரு வர்த்தகசாலையைக் கட்ட எத்தனித்தார்
. அவர்களுக்கு அங்கே ஒன்றும் பலிக்கவில்லை.
லும், பின்பு அவர்கள் புதுச்சேரியை அதைச் கி.பி. 1674-ஆ ஏப்பிரல்மீ.
றிலும் விஸ்தாரமான தேசத்தோடு கைப்பற்றிக்
ாண்டு, அங்கே நிலையாய் விடுகள், கோட்டை
தலானவைகளைக் கட்டிக்கொண்டார்கள். அது
ாஞ்சக்காலத்திற்குள் விர்த்தியடைந்தது. மேற்
சமுத்திரத்தில் உள்ள மாகியும், கல்கத்தாவுக்கு
ருகிலிருக்கும் சந்திரநகரும் இந்தப் புதுச்சேரிக்
கீழ்ப்பட்டிருந்தன. பிராஞ்சுக்காரரும் இங்கி
ஷ்காரரும் போட்டிசெய்துகொண்டே வருகை
ல், கடைசியில் இங்கிலீஷ்காரரே ஜயங்கொ
டு இந்தக் கிழக்குத்தேசத்தில் பிரபலமான ராஜ்
த்தை ஸ்தாபித்தார்கள். அடியில் வரும் அதிகா
ங்களில் முக்கியமாய் அதன் வரலாறு கூறலாகும்.

5—ம் அதிகாரம்.

இந்தியாவில் இங்கிலீஷ் அதிகாரம் தோன்றியது.

கி. பி. 1744–௵ முதல், 1753–௵ வரைக்கு

இந்தியாவில் இங்கிலீஷ்காரர் ஜயம்பெ
அரசாட்சியை ஏற்படுத்திய சரித்திரத்தை இப்பே
சொல்லப்போகிறோம். தங்களுக்கு அதிபிரியமா
ஜநநபூமியை விட்டு வெகு தொலையான இத்தே
துக்கு வந்த கொஞ்சம் பெயர் இவ்விடத்தில் ம
ஐசுவரியமும் விஸ்தாரமும் மேன்மையும் பொ
திய ராஜ்யத்தை அதற்குச் சம்பாதித்து, அதற்
கீர்த்தியும் பூசியதையும் வரும்படியாயும், தாங்க
புதியதாய்ச் சம்பாதித்த நாடுகளின் குடிகளுக்
நன்மையுஞ் சௌக்கியமுமுண்டாகும்படியாய்
அவைகளைச் சாமர்த்தியத்தோடும் நீதியோடும் ஆ
டவகையைக் காட்டும் இந்த யதார்த்தமான சரித்
மானது புலவர்பாடிய எந்தக் கதையைப்பார்க்கிலு
மனதுக்கு அதிக மகிழ்ச்சியைத் தரும்.

இங்கிலண்டுக்கும் பிராஞ்சுக்கும் நடந்த யுத்தம்.

1744–ம் ௵த்தில் இங்கிலாண்டு தேசத்தாருக்கு
பிராஞ்சுதேசத்தாருக்கும் சண்டையுண்டாக, அ
விரு தேசத்தாருக்கும் அநேகம் செழிப்புள்ள கா
யாட்சிகள் உண்டாயிருந்த இந்தியாவிலும் அ
னாலே கொஞ்சநாளுக்குள்ளே போருண்டாயிற்று

டியூப்ளே.

அக்காலத்தில் இந்தியாவில் பிராஞ்சுக்காரர் அ
கமாயிருந்தார்கள். அவர்களுடைய முக்கிய பட்
ணம் புதுச்சேரி. அவர்களுடைய அதிகாரி வெ
புத்திசாலியும் ஆதிக்கத்தை நாடுகிறவனுமான டியூ

5. அதி.

கி. பி. 1744.

என்பவன்; அவன் இத்தேசத்து ராஜ்யங்களுக்
டக்கும் உடன்படிக்கைகளையும் சற்பனைகளை
டத்துவதில் மிகவும் சமர்த்தனென்று தெரியவந்
இந்தியாவின் படைச்சேவகர்களை ஐரோப்பிய
ணுவ அதிகாரிகளைக்கொண்டு நடத்தினால்,
ர்கள் ஐரோப்பாவின் படைச்சேவகருக்குச்
ரியத்தில் கொஞ்சங்குறைய சமானமாயிருப்
கள் என்று முதலில் கண்டுபிடித்தவன் அவன்
. சுதேச பிரபுக்கள் ஒருவரையொருவர்
ராதித்துச் சண்டைசெய்து பிரிவினையாயிருப்
னல் அவர்களைத் தன் தேச அதிகாரத்துக்கு
லசாய்க் கீழ்ப்படுத்தலாமென்று முதலில் அவ
குத் தோன்றியது. இந்தியாவை ஜயிக்கவேண்
மன்பது அவனுடைய முதன்மையான கருத்து;
தக் கருத்தை நிறைவேற்றிக்கொள்ள அவன்
க்கு உண்டான முழுச் சக்தியோடே பிரயாசப்
டான்.

இந்தியாவிலிருந்த இங்கிலீஷ்காரர்.

இங்கிலீஷ்காரருக்கு அப்போது அத்தன்மையான
வனில்லை. இருந்த இங்கிலீஷ்காரரும் கொஞ்
தான். அவர்களும் வியாபாரகாரியங்களில் படிந்
ர்களாயிருந்தார்களே தவிர, யுத்தவிஷயங்களைக்
னித்ததில்லை; ஆகிலும் அவர்கள் டியூப்ளே அநு
த்த உபாயத்தை அநுசரித்து, சுதேச படைச்
வகர்களைத் தங்கள் ஊழியத்தில் அமர்த்தி, இங்கி
ஷ் ராணுவ அதிகாரிகளைக்கொண்டு அவர்களை
தத்தில் பழக்குவித்தார்கள். முதலில் இந்தப்
டைச்சேவகர்களுடைய தொகை கொஞ்சந்தான்;
கிலும் இந்தியாவில் இங்கிலீஷ்காரரின் அதிகா
பெருகிவர, அதுவும் பெருகியது. சிப்பாய்கள்
பரும்பாலும் இங்கிலீஷ்காரர் பட்சத்தில் வெகு

5. அதி.

விசுவாசமும் தைரியமுமுள்ளவர்களாய் நின்று ச
டை செய்துகொண்டுவந்தார்கள்.

லாபோர்டனே சென்னபட்டணத்தை எதிர்த்தது. 1746.

ஐரோப்பாவில் இங்கிலீஷ்காரருக்கும், பிர
ஞ்சுக்காரருக்கும் யுத்தம் தொடங்கினவுடனே,
பல்களைச் சேர்த்துக்கொண்டுபோய் அப்போது
ஞடகத்தில் இங்கிலீஷ்காரருடைய முக்கிய ஸ்த
மாகிய போர்ட் ஸேண்ட் ஜார்ஜ் கோட்டை
எதிர்க்கும்படி போர்போன், மோரிஸ்தீவுக
ஆளும் அதிகாரியாயிருந்த லாபோர்ட்நேக்குப் பி
ஞ்சு துரைத்தனத்தார் உத்தரவுகொடுத்தார்கள்.

சென்னபட்டணம் பிடிபட்டது. செப்டம்பர் 10௳.

அந்த அதிகாரி உடனே அந்தக் கோட்டையி
கிட்டக் கப்பற் கூட்டத்தோடு வந்து சேர்ந்தா
இங்கிலீஷ்காரர் ஐந்துநாள்வரையிலும் தங்
கோட்டையை எதிரி கைப்பற்ருமலிருக்கும்ப
காப்பாற்றிக்கொண்டிருந்து, பின்பு சென்னபட்
ணத்தையும் அதின் கோட்டையையும் எதிரிக்கு
கீழ்ப்படுத்திவிட்டார்கள். அவர்கள் சொற்பம
மீட்கும் பொருளைக் கொடுத்தால், அவற்றை மறுப
கொடுத்துவிடுகிறதாய் லாபோர்டே அவர்களுக்
வாக்குத்தத்தம் செய்தான்; ஆகிலும் அந்தச் சேனு
பதி இப்படி வெற்றிபெறுவது கண்டு பொருமை
கொண்ட டியூப்ளேக்கு இந்த வாக்குத்தத்தம் சரி
படவில்லை: ஆகையால், அவன் இங்கிலீஷ்கா
ரைப் புதுச்சேரிக்குச் சிறைபிடித்துக்கொண்
போய், அங்கு அவர்களை அதர்மமாய் நடத்தின
அவனுக்கு அபகீர்த்தியை உண்டுபண்ணிற்று.

போர்ட்ஸெண்ட் டேவிட் என்னும் கோட்டையை எதிர்த்தது. 1746 டிசம்பர்மீ. 1749 மார்ச்சுமீ.

டியூப்ளே பின்பு போர்ட்ஸேண்ட் டேவிட் எ
னும் கோட்டையைப் பிடித்துக்கொள்ள எத்தன
பட்டான். அதைக் கைப்பற்றினல் கர்னடக
முழுவதும் அவன் சுவாதீனமாயிருக்கும். தன் சத்து
ருக்களுக்கு விரோதமாய்த்தன்னேடு சிநேகக்கட்டு

செய்யும்படி கர்னாடக நபாபுக்குப் போதனை து, அவனுடைய உதவியைக் கேட்டுக்கொண் . இப்படி இருக்கையில், இங்கிலாண்டிலி சேனையோடுகூடப் பலமான கப்பற்படை வந்துசேர்ந்தது; உடனே பிராஞ்சுக்காரர் ன்ட் டேவிட் கோட்டையின் முற்றுகையை விட்டுப் புதுச்சேரி வந்து சேர அவர்கள் ாரா முற்றுகைபோட்டதுபோக, அவர்களே க முற்றுகைபோடப்பட்டார்கள். 5. அதி.

றல் இங்கிலீஷ்காரர் இப்போது பலத்த கட் ாரராயிருந்தும், அப்புதுச்சேரி பட்டணத்தைப் துக்கொள்ள அவர்களுக்குப் பலம் போதாது; யால் அவர்கள் பிராஞ்சுக்காரரோடு போர் துகொண்டிருந்ததை விட்டுவிட்டு அடுத்த பக் ச் சீமையாகிய தஞ்சாவூரில் நடந்துகொண்டி சிறு சண்டையில் சேர்ந்துகொண்டார்கள். ாவூர் சமஸ்தானத்தின் சிங்காதனத்திலிருந்து சகோதரனால் நீக்கப்பட்ட ஒரு அரசன் தன் பத்தை மறுபடி மீட்டுக்கொள்ளும்படி இங்கி காரர் உதவிசெய்தால், அவர்களுடைய உத தக் கைம்மாறாகத் தேவிகோட்டையைக் கொ றேனென்று சந்திபேசினான். அதற்கு அவர் சம்மதித்துத் தஞ்சாவூர்க்கோட்டையை எதிர்க்க தேசத்தர்களடங்கிய ஒரு சிறு சேனையை அனுப் ர்கள்; ஆகிலும் அங்கு ஆண்டுகொண்டிருந்த ன் தன் சகோதரனுக்கு அவர்கள் உதவிசெய் லிருக்கவேண்டுமென்னும் உடன்படிக்கை துகொண்டு, தேவிகோட்டையையும், அதைச் மூழுள்ள நாட்டையும் அவர்களுக்கு விட்டபடி , அவர்கள் சமாதானப்பட்டுப்போய்த் தங்க

தஞ்சாவூரில் நடந்த சண்டை. 1749 மார்ச்சுமீ.

5. அதி. ளைச் சரணமென்றடைந்தவனைக் கைவிட, இத
அவர்களுக்கு வெகு அபகீர்த்தி உண்டாகியது.

ஐரோப்பாவில் சமாதானம் உண்டாகியும், இந்தியாவில் யுத்தம் நடந்தது.

இதன் இடையில் ஐரோப்பாவில் பிராஞ்சுக் நுக்தும் இங்கிலீஷ்காரநுக்தும் சமாதானம் உண் கியது; ஆகிலும் இந்தியாவில் யுத்தம் நிற்கவில் இந்த இருதேசத்தாரையும் சேர்ந்த மனுஷர் யதார்த்தமாய் யுத்தங்களில் முக்கிய கட்சிக்கார வெளிப்படக்கூடாமலிருந்தது. அவர்களுக்கு வர் மற்றொருவருடைய சேனையை எதிர்க்கவா ஒருவர் மற்றொருவருடைய பட்டணத்தை மு கைபோடவாவது சரிப்படவில்லை; ஆகைய அவர்கள் பகிரங்கமாய்ச் சண்டைசெய்துகொ டிருந்த சுதேச அரசர்களோடு முறையே கட பிரதிகட்சியாய்ச் சேர்ந்துகொண்டு, ஒருவரே ஒருவர் முன்போலவே போர்செய்துவந்தார்கள்.

தென் இந்தியாவில் காரியங்களிருந்த நிலைமை.

அடியிற் காண்கிற சங்கதிகள் செவ்வையா தெரிவதற்காகத் தென் இந்தியாவில் காரியங் இன்ன ஸ்திதியிலிருந்தன என்பதை முன்னத விவரிக்கவேண்டியது. நாம் சொல்லிவருகிற சங் கள் நடந்தகாலத்தில் இந்தியாவின் தென்பாகத் இரண்டு பெரிய அரசாங்கங்கள் இருந்தன. முத வதும் பெரியதுமான அரசாங்கத்தின் அரசன் நிஜ என்பவன்; அவனுடைய ராஜதானி ஐதராபா அவன் பூர்வத்தில் டில்லிச்சக்கரவர்த்திக்கு உண் யாய்க் கீழ்ப்படிந்திருந்தவன். இப்பொழுது பெ ருக்குமாத்திரம் கீழ்ப்படிந்து உண்மையில் சுயாதீ னாக ஆண்டான். மற்றொரு ராஜாங்கத்தின் அதிப கர்நாடக நபாபு. அவனுடைய ராஜதானி ஆற்கா அவன் நிஜாமுக்கு அடங்கினவனாய் ஆண்டவன்.

5. அதி.

ஐதராபாத்துக்காகவும் ஆற்காட்டுக்காகவும் நடந்தசண்டைகள். 1748.

ந்தக்காலத்தில் இந்த இரண்டு ராஜ்யங்களை ரடுவந்த அதிபதிகள் இறந்துபோனுர்கள். ஐத ாத்தில் மாஜி நிஜாமின் குமாரனுகிய நாஜர் ந என்பவன் பட்டத்துக்கு வந்தான். ஆற்காட் ஆன்வார் உத்தீன் என்ற பிரபு அரசபட்டத் அடைந்தான். அவ்விருவர்களுக்கும் போட்டிக் ர்கள் தோன்றினுர்கள். நாஜர்ஜங்குக்கு அவன் ாதரன் குமாரனுன மர்ஜாபாஜங்கு என்பவன் ரியாகத் தோன்றினுன். ஆன்வார் உத்தீனுக்கு ரியாக முந்தி ஆண்டிருந்த ஒரு தலைவனுடைய மகனுகிய சந்தாசாகிப் ஏற்பட்டான். இந்த ர்க்கட்சிக்காரர்கள் இருவரும் தங்கள் சேனைகளை ரூய்ச் சேர்த்துக்கொண்டு, பிராஞ்சுக்காரரோடு நகக் கட்டுப்பாடு செய்யவேண்டுமென்று கோரி கள்.—இதற்குப் பிராஞ்சுக்காரர் மிகுந்த சந்தோ ந்தோடே சம்மதித்தார்கள். டியூப்ளே கோரிய இதுதான். அவன் உடனே அவர்களுக்கு உத ாக 400 பிராஞ்சுபடைச் சேவகர்களையும், 2000 தேச சிப்பாய்களையும் அனுப்பினுன். அம்பூ சண்டை நடந்தது. மேற்சொன்ன எதிர்க்கட் க்காரருக்கே ஜயம் கிடைத்தது; ஆன்வார் உத் கொல்லப்பட்டான். அவனுடைய பிள்ளை கிய மகம்மது ஆலி என்பவன் மிகுந்த சேனை பாடே திரிசிராப்பள்ளிக்கு ஓடிப்போனுன். பிரா சுக்காரருக்கு இந்தியாவில் தளகர்த்தர்களாய் வந்த ர்களுக்குள் மிகவும் பராக்கிரமசாலியும் ஊக்க ள்ளவனுமான புஸி என்பவனுல் அவர்கள் நடத் ப்பட்டு, பலவிசை ஜயங்கொண்டு மர்ஜாபாஜங்கு ன்பவனுக்குப் பட்டங்கட்டினுர்கள்; ஆகிலும், கிய நிஜாம் அவன் பெற்ற ஜயத்தின் பலனை நெடு ள் அநுபவிக்கவில்லை. அவன் தனது சொந்தத்

1749-ஜுலைமீ 23உ.

5. அதி.

டிசம்பர்மீ 5உ 1750-ஆ.

தேசத்தில் நேரிட்ட ஒரு கலகத்தை அடக்க முய செய்துகொண்டிருக்கையில், ஒரு யுத்தத்திலே கெ லப்பட்டான். புசி என்பவன் அவனுக்குப் பதில் நாஜர்ஜங்குக்குத் தம்பியாகிய சலாபாத்ஜங்கு னும் தலைவனை ராஜாவாக ஏற்படுத்தினன். சந் சாகிபும் தான் கோரிய அதிகாரத்தை அடைந்தா

டியூப்ளேயின் மகிழ்ச்சியும், ஜயமும்.

இதுதான் டியூப்ளேக்கு ஜயகாலம். நி மும் கர்நாடக நபாபும் அவனால் நிலைபெற்றார்க அவனுக்கு தேன் இந்தியாவின் பிரபு என்னு பட்டம் உண்டாயிற்று. சிறந்த மரியாதைகளு பட்டப்பேர்களும் அவன் பெற்றான். அவனுடை கோரிக்கைகளெல்லாம் நிறைவேறுவதாகத் தோ றின; அவனுக்கு ஆநந்தம் மிகுந்த காலத்தில் தன குப் பிரதானமான வெற்றியுண்டான இடத்தி அருகில் ஒரு ஸ்தம்பம் நாட்டி, அதில் தனது கீர் யை விளங்கச்செய்யும் சாஸனங்களை வெட்டுவி வேண்டுமென்று கருதினன். மேலும் டியூப் யின் ஜயப்பட்டணம் என்னும் ஒரு பட்டணத் அதைச் சுற்றிலும் கட்டுவித்தான்.

இங்கிலீஷ்காரருடைய அஜாக்கிரதை.

இங்கிலீஷ்காரர் பிரதிகட்சியிலே சேர்ந்தார்க ஆனாலும் பிராஞ்சுக்காரர் அவர்களுடைய சிநே தர்களுக்கு விசேஷமான உதவிசெய்துவருகையி இங்கிலீஷ்காரர் தங்கள் கட்சிக்காரருக்குச் செ வையாய்ச் சகாயம்பண்ணவில்லை. இன்னும் அ கள் கர்னடக நபாபு என்று பாவித்திருந்த மகம்ம ஆலிக்கு உதவியாகக் கொஞ்சம் சேனையை அனுப் யிருந்தும், அவர்களுடைய உதவி பயன்படவில்லை அந்த நபாபுக்கு திரிசிராப்பள்ளியில் நிர்ப்பந்தமா ருக்கும்படி அது முற்றுகைபோடப்பட்டது. பி ஞ்சுக்காரர் எங்கும் வெற்றிபெறுவதைக் கண்டு, அ தப் பட்டணத்தை எதிரிக்கு விட்டுவிட்டுத் தன

5. அதி.

...ிதர்களைக் கைவிட்டு, அவர்களுடைய பகைவ
...கூடிக்கொள்ள அவன் எத்தனித்திருக்கையில்,
...வுடைய அபிப்பிராயம் முற்றும் மாறுவதற்
...வான ஒரு விசேஷம் நேரிட்டது.

ஆற்காட்டை எதிர்க்கவேணுமென்று யோசித்தல்.

...தென்னவெனில், தேவனம்பட்டணக் கோட்
...லிருந்த ஒரு சிறியவரான சேனபதி இத்தரு
...லே கர்னடகத்தின் ராஜதானியாகிய ஆற்காட்
...எதிர்க்கவேண்டுமென்று இங்கிலீஷ் ஆலோச
...சங்கத்தாருக்குத் தெரியப்படுத்தினர். இப்ப
...செய்வதால் தனது ராஜதானிக்கு அபாயம்
...ட்டது என்று கேள்விப்பட்ட உடனே சந்தா
...ஹப் நிச்சயமாய்த் திரிசிராப்பள்ளியை விட்டு
...கே போய்விடுவானகையால், திரிசிராப்பள்ளி
... முற்றுகை எடுபட்டுப்போகுமென்று அவன்
...சொன்னன். இந்த யோசனை நல்லதென்று
...லாசனைச் சங்கத்தார் ஒத்துக்கொண்டு, அந்தக்
...பத்தை நடப்பிக்கும்படி யோசனைசொன்னவ
...கே உத்தரவுகொடுத்தார்கள்.

ராபர்ட் க்ளைவ்.

...ந்தச் சிறியவரான இராணுவ அதிகாரியின்
... ராபர்ட் க்ளைவ். இவருடைய மிகுதியான
...ியத்தினலும், விவேகத்தோடே கூடிய சாமர்த்
...த்தினலுமே முக்கியமாய் இந்தியாவில் இங்கி
...காரருடைய அதிகாரம் நிலைத்திருக்கிறது.
...ர் அதிக தைரியமும் ஆண்மையுமுள்ளவர்.
...ர் சுபாவமாய் மகா கோபமும் அகங்காரமு
...ள்ளவர். அப்படியிருந்தும், அவர் மகா சூட்சும
...ா புத்தியும், யுக்தியும், முன்யோசனையும் உள்ள
... முதலில் அவர் இந்தியாவுக்குச் சிவில் உத்தி
...கஸ்தராக அனுப்பப்பட்டார்; ஆனல் அந்தத்
...ழில் அவருடைய குணத்துக்குப் பொருந்தா
...யால், அதைவிட்டு ராணுவத்தில் சேர்ந்துகொண்

5. அதி. டார். பின்பு அவருடைய சௌரியத்திலு துணிவினாலும் யுத்தம் செய்வதே தமக்குத் தகு தொழில் என்று சீக்கிரத்தில் தெரியக்காட்டினார்

க்ளைவ் ஆற்காட்டின்மீது படையெடுத்துப் போனது.
1751–ஞ ஆகஷ்டமீ 26உ.

1751–ம் ஞ ஆகஸ்டுமீ 26உ 200 இங்கிலீஷ்க நும், 300 சிப்பாய்களும் அடங்கிய சிறிய சே யைக் கூட்டிக்கொண்டு அவர் சென்னபட்ட தை விட்டுப் புறப்பட்டார். அவர் அதிவேகத்தே ஆற்காட்டுக்கு அணிவகுத்துச் செல்லுகைய வானமெங்கும் புசலும் மின்னலும் இடிமுழக்க மாக மழையானது பிரவாகமாய்ப் பொழிந்துகொ டிருந்தும், அதைச் சற்றேனும் பாராமல், தமது சி சேனையை நடத்திக்கொண்டு, ஆற்காட்டிலிரு பூர்வமான கோட்டைக்கு வந்து சேர்ந்தார். அ உள்ளே நுழைகிறதற்குள்ளாகவே சத்துருக் கோட்டையை விட்டு ஓடிப்போனார்கள். உட அந்தக் கோட்டையின் மதில்களைச் செவ்வையா பலப்படுத்தத் தொடங்கினர். இடிந்துபோயிரு அலங்கங்களைப் பழுதுபார்த்து, முற்றுகையைத் த கத்தக்கதாகப் புதுப்பித்தார். மேலும் இன்னு கோட்டைக்குள்ளிருந்த குடிகளைப் பயப்பட ண்டாமென்று தைரியஞ்சொல்லி அமர்த்தி கோட்டைக்குள்ளே பத்திரஞ்செய்துவைத்திரு சொத்துக்களை ஒருவரும் தொடக்கூடாதென் கண்டிப்பான உத்தரவுகொடுத்தார். அவர் அடி கடி கோட்டையிலிருந்து வெளியே வந்து, தாங் விட்டுப்போன கோட்டையைச் சுற்றிலும் இ னும் பதுங்கியிருந்த சத்துருச்சேனைகளின்மே விழுந்து துரத்தினர். இந்தச் சண்டைகளிலெல் லாம் அவருக்கு ஜயம் உண்டாகியது; ஆகிலு பெரிய முற்றுகை உண்டாகும் என்று அவர் எதி

5. அதி.

கி. பி. 1751.

தமையால், அதற்குத் தகுந்தபடி கோட்டை துரிதமாய்ப் பலப்படுத்த முயற்சிசெய்தார்.

வர் சத்துருக்களுடைய வரவை நீடித்து எதிர் துக்கொண்டிருக்கும்படியாய் நேரிடவில்லை. கோட்டையைப் பிடித்துக்கொண்டார் என் மாசாரம் திரிசிராப்பள்ளியில் சந்தாசாஹேபு உடனே தெரியவந்தது. அந்நேரமே ஒரு பல தண்டைத் தன்னுடைய பெரும்படையிலிருந் ரித்து ஆற்காட்டுக்கு ஒத்தாசையாக அனுப்பி தான். அதில் பிராஞ்சுக்காரர் 150 பேர் தார்கள். அது சீக்கிரத்தில் பெருகி 10,000 அடங்கியதாயிற்று. அப்படையை நடத்திக் ண்டுவந்தவன் நபாபின் குமாரனாகிய ராஜா ஹபு.

சந்தாசாஹேபு ஒரு சேனையை ஆற்காட்டுக்கு அனுப்பியது. செப்டம்பர் மீ 23உ:

ந்தப் படை வருகிறதற்குள்ளாகக் கோட்டைக் இருந்தவர்களில் அநேகர் இறந்துபோனதினு 120 இங்கிலீஷ்காரரும், 200 சிப்பாய்களுமாத் இருந்தார்கள். இவ்வளவு கொஞ்சம்பேர் இருந் ம், மிகுந்த தைரியங்கொண்டு என்னவந்தா வரட்டுமென்று நிர்ப்பயமாய் சத்துருக்கள் தாக்குவதற்கு எதிர்பாத்துக்கொண்டிருந்தார் 50 நாள்வரையில் கோட்டை முற்றுகைபோ ட்டது. அந்த பெரிய சத்துருவின் படையா உறுதியாய் முற்றுகைபோட்டு நாளுக்கு நாள் ட்டையை இடித்துக்கொண்டுவந்தது. இப்படிச் ருக்கள் வெளியே நின்று யுத்தஞ்செய்கிற து, உள்ளிருந்த சிறிய வீர சேனையானது பசியி லயும் வருத்தப்பட்டுக்கொண்டிருந்தது; ஆகி அவர்களுக்குண்டான பசி, முதலான சங்கடம் றபாயம் இதெல்லாம்கூடி அவர்கள் அதிக ஐக் ந்துடன் சேர்ந்து ஒன்றாய் நின்று யுத்தஞ்செய்

இங்கிலீஷ்காரருடைய சிறு சேனையின் வீரியம்.

5. அதி.

இ. பி. 1751.

சிப்பாய்களுடைய உதாரகுணம்.

வதற்கு ஏதுவாயின. சிப்பாய்கள் சாப்பாடில்ல சோர்ந்துபோயிருந்தார்கள்; ஆகிலும் அவர்கள் ளுடைய இளைய சேனைத்தலைவன் கிட்டவந்து, க்கிற அரிசியையெல்லாம் எங்கள் தோழர இங்கிலீஷ்ப் படைச்சேவகருக்குக் கொடுப் அதை வடிக்கிற கஞ்சித்தண்ணீர்மாத்திரம் ளுக்குப் போதுமென்று சொன்னார்கள்.

அவர்களுக்கு வாக்குத்தத்தமான உதவி.

